***புதுச்சேரி அரசு***

***துணைநிலை ஆளுநர் செயலகம்***

**No. LGS/PRO/2026** **21 மே 2026**

**<u>பத்திரிகை செய்தி</u>**

முன்னாள் பாரதப் பிரதமர் பாரத் ரத்னா ராஜீவ் காந்தியின் நினைவு நாள் தேசிய வன்முறை எதிர்ப்பு நாளாக புதுச்சேரி அரசு சார்பில் இன்று (21.05.2026) அனுசரிக்கப்பட்டது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன், காமராஜர் சாலை, ராஜீவ் காந்தி சதுக்கத்தில் உள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

சட்டமன்ற உறுப்பினர்கள், திரு ராஜவேலு, திரு சாய் ஜெ. சரவணன் குமார், திரு சிவகொழுந்து, திரு ஏ கே டி ஆறுமுகம், திரு அழகு (எ) அழகானந்தம் திரு நாராயணசாமி, திரு ரவிக்குமார், தலைமைச் செயலர் திரு சரத் சவுகான், செய்தி மற்றும் விளம்பரத்துறையின் இயக்குனர் திரு சுரேஷ்ராஜ் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில், அனைவரும் வன்முறை எதிர்ப்பு நாள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். அதனைத் தொடர்ந்து, மக்கள் மாளிகையில் வன்முறை எதிர்ப்பு நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது. துணைநிலை ஆளுநர் முன்மொழிய மக்கள் மாளிகை அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் உறுதிமொழி ஏற்றனர். துணைநிலை ஆளுநரின் செயலர் உடன் இருந்தார்.